## சுருக்கம்

அறிவிப்பு – மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது – கோபிச் செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், இராசிபுரம், மேட்டூர், கொமாரபாளையம், பரமக்குடி, சங்கரன் கோவில் மற்றும் தென்காசி ஆகிய 8 நகராட்சிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள்– தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் –அந்நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலைப்பணிகளை மேற்கொள்ள அனுமதி அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.3) துறை

அரசாணை (ப) எண்: 210 நாள்: 26.05.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 12

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (3ப) எண்.6, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, நாள் 02.03.2007.
2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலரின் கடிதம் TNUDP-III MTR/2008–10, நாள் 6.2.2008.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.24067/2006/UGSS2, நாள் 02.03.2009.

---

**ஆணை:**

தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களுக்கும் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமைத்திட கொள்கை அளவில் முடிவெடுத்து இதுகுறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் செய்த அறிவிப்பு தொடர்பாக, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்ட ஒன்பது நகராட்சிகளில், பின்வரும் நிதியாதாரங்களின்படி பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சிகளின் பெயர் | மானிய நிதியம் I | உள்ளாட்சி அமைப்பின் பங்கு | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டகடன் III | கோரப்படும் கூடுதல் மானியம் | கட்டுமானத்தின் போது வட்டி | மொத்த திட்ட மதிப்பீடு | பெரு எந்திர பராமரிப்புச் செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபாய் கோடிகளில் | | | | | | ரூபாய் இலட்சங்களில் |
| 1 | சங்கரன் கோவில் | 6.29 | 5.11 | 9.58 | --- | 0.20 | 21.18 | 40.00 |
| 2 | கோபிச்செட்டிப் பாளையம் | 6.50 | 6.16 | 5.40 | 3.59 | 0.23 | 21.88 | 62.00 |
| 3 | பரமக்குடி | 9.75 | 9.75 | 12.98 | --- | 0.55 | 33.03 | 65.00 |
| 4 | கொமாரபாளையம் | 4.38 | 4.58 | 5.64 | --- | 0.12 | 14.72 | 79.50 |
| 5 | சின்னமனூர் | 3.00 | 4.04 | 2.99 | --- | 0.13 | 10.18 | 40.00 |
| 6 | மேட்டூர் | 7.45 | 5.93 | 4.00 | 7.46 | 0.17 | 25.01 | 77.60 |
| 7 | இராசிபுரம் | 4.87 | 5.05 | 6.31 | --- | 0.27 | 16.50 | 30.97 |
| 8 | தென்காசி | 7.90 | 8.68 | 9.76 | --- | 0.20 | 26.54 | 45.81 |
| 9 | சத்தியமங்கலம் | 3.61 | 3.36 | 2.65 | 2.41 | 0.11 | 12.14 | 35.54 |
| | மொத்தம் | 53.75 | 52.66 | 69.31 | 13.46 | 1.98 | 181.16 | 476.42 |

2. மேற்குறித்த ஒன்பது நகராட்சிகளில், சின்னமனூர் நகராட்சியில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. இதர நகராட்சிகளுக்கென விரிவான திட்ட அறிக்கை, தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி மற்றும் சேவை நிறுவனத்தால் (TNUIFSL) நியமிக்கப்பட்ட கலந்தாய்வரால் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்பு குழு (State Level Project Sanctioning Committee)-வால் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால் நீரேற்று நிலையங்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்ட இடங்கள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடங்களின் நிலைப்பாடு குறித்து நிலுவையில் உள்ள வழக்குகள், இட மாற்றம் மற்றும் தேவைப்படும் நிலங்களை முடிவு செய்வதில் ஏற்பட்ட கால தாமதம், புலத் தணிக்கையின் போது கூடுதலாகத் தேவைப்படும் ஒதுக்கீடுகள் ஆகியவை காரணமாக விரிவான திட்ட அறிக்கையில் மாறுதல் செய்யப்பட்டது. இதன் காரணமாக 2006–07 முதல் 2008–09 வரையிலான விலை விபர அட்டவணையில் திருத்தமும், தேவைப்படும் மின்சார மற்றும் இயந்திர பொருட்களின் சந்தை விலை மாற்றமும், மண் வகைப்பாட்டின் மாற்றத்தால் கட்டுமானத்தில் சில மாற்றங்களும், இதனால் ஏற்படும் எதிர்பாராச் செலவினங்களும் பின்வரும் திட்டச் செலவினத்தில் திருத்திய விரிவான திட்ட அறிக்கை திட்டம் செயல்படுத்தும் நிறுவனமான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | நகராட்சிகளின் பெயர் | திருத்திய திட்ட மதிப்பீடு (ரூபாய். கோடிகளில்) |
|---|---|---|
| 1 | கோபிச் செட்டிப்பாளையம் | 34.56 |
| 2 | சத்தியமங்கலம் | 22.51 |
| 3 | இராசிபுரம் | 24.33 |
| 4 | மேட்டூர் | 34.93 |
| 5 | கொமாரபாளையம் | 17.07 |
| 6 | பரமக்குடி | 44.25 |
| 7 | சங்கரன் கோவில் | 28.00 |
| 8 | தென்காசி | 31.00 |
| | **மொத்தம்** | **236.65** |

இவ்விரிவான திட்ட அறிக்கைக்கு நகராட்சிகள் வாரியாக நகராட்சி நிர்வாக இயக்குநரால் திருத்திய நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், மேற்குறித்த எட்டு நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு 2007 ஆம் ஆண்டிலிருந்து சாலைகள் அமைக்கும் பணி நடைபெறவில்லை என்றும், பல்வேறு திட்டங்களின் கீழ் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், பழுதடைந்த சாலைகளில் பழுது ஏற்பட்ட இடத்தில் பராமரிப்புப் பணிகள் மட்டும் செய்யப்பட்டு வருகிறதெனவும் குறிப்பிட்டுள்ளார். மேலே பத்தி–2ல் குறிப்பிட்ட காரணங்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-II முடிவடைந்துவிட்ட நிலையிலும், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III ல் (TNUDP-III)

நிதியாதாரம் மேற்குறித்த பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கென முடிவுற்று விட்ட நிலையில், கீழ்க்கண்ட இதர நிதி ஆதாரங்களின் கீழும் போதிய பணிகள் செய்யப்பட்டு விட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(தொகை கோடியில்)

| வ. எண் | நிதியாதாரம் | மொத்த ஒதுக்கீடு | ஒப்புதல் அளித்த தொகை | பணிகள் | மாநகராட்சி |
|---|---|---|---|---|---|
| 1 | JICA | 283.23 | 143.00 | குடிநீர் அபிவிருத்தி திட்டம் | திருச்சி |
| 2 | JICA | | 44.00 | பாதாள சாக்கடைத் திட்டம் | சிதம்பரம் |
| 3 | JICA | | 33.90 | பாதாள சாக்கடைத் திட்டம் | பட்டுக்கோட்டை |
| 4 | JICA | | 14.72 | பாதாள சாக்கடைத் திட்டம் | இராமேஸ்வரம் |
| | மொத்தம் | 283. 23 | 235.62 | | |
| 5 | Kfw | 422.00 | 22 . 22 | குடிநீர் அபிவிருத்தி திட்டம் | திருநெல்வேலி |
| 6 | Kfw | | 3.34 | மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டம் | பண்ருட்டி |
| 7 | Kfw | | 209.22 | பாதாள சாக்கடைத் திட்டம் | ஈரோடு |
| 8 | Kfw | | 40.00 | மழைநீர் வடிகால் திட்டம் | திருப்பூர் |
| 9 | Kfw | | 24.30 | மழைநீர் வடிகால் மற்றும் மழை நீர் சேகரிப்பு திட்டம் | திருச்சி |
| 10 | Kfw | | 35.67 | பாதாள சாக்கடைத் திட்டம் | விழுப்புரம் |
| | மொத்தம் | 422.00 | 334.75 | | |

மேலும் இரண்டு ஆண்டுகளைக் கடந்தும் இன்னமும் இப்பணிகள் துவங்க இயலவில்லை எனவும், இதற்கிடையே சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் பழுதடைந்த சாலைகள் நெடுநாட்களாக சீரமைக்கப்படாததால், அவற்றை உடனே சீரமைக்குமாறு கோரி தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர் எனவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி மற்றும் சேவைகள் நிறுவனம், இப்பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்த ரூ.65.60 கோடி ஒட்டு மொத்த மானியத்தைக் கோரியுள்ளது என்றும் கூடுதல் மானியங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படினும், குறைந்த அளவு வீட்டு சேவை இணைப்புகள் மற்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணத்தை உயர்த்துவதில் உள்ள நடைமுறை சிரமங்கள் ஆகியவற்றினால் இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கென (Operations and Maintenance) தனியாக கூடுதல் மானியமும் அளித்தால் மட்டுமே இத்திட்டங்கள் நிலைத்திருக்க இயலும் எனவும் அவர் தெரிவித்து, மேற்கூறப்பட்ட காரணங்களால் இப்பாதாள சாக்கடைத் திட்டங்கள் ஊரக வளர்ச்சி மற்றும்

உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்ததையொட்டி பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னரும் இது வரை மேற்கொள்ள இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கோபிச் செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், இராசிபுரம், பேட்டூர், கொமாரபாளையம், பரமக்குடி, சங்கரன் கோவில் மற்றும் தென்காசி ஆகிய 8 நகராட்சிகளிலும் அறிவிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களை தகுந்த நிதிபாதாரங்கள் கிடைக்கப் பெறும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைத்தும், இத்திட்டங்களை எதிர்நோக்கி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சாலைப் பணிகளை மேலும் காலந்தாழ்த்தாமல், சாலைகளது முக்கியத்துவம் கருதி அவற்றை மேற்கொள்ள அனுமதி அளித்தும் ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை— 600 005.
மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், சென்னை—600 017.

நகல்:

மாண்புமிகு அமைச்சர் (ஊ.வ (ம) உ) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—600 009.
செயலரின் நேர்முக உதவியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவு — செலவு / அநமு-2) துறை, சென்னை—600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/5/09
பிரிவு அலுவலர்.